# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

ந.க. 555 / 1420 / டி 1 நாள் : 20.09.2010

பொருள் : நிர்வாகம் - திருக்கோயிலில் முக்கிய திருநாட்களில் நடைபெறும் பிரம்மரத மரியாதை குறித்தான கருத்துரையினை தெரிவிக்க கேட்டல்.

------------

திருக்கோயிலில் கைசிக ஏகாதசி நாளில் கைசிக புராணம் வாசிப்பதற்கும், அத்யயன இராப்பத்து உற்சவத்தில் சாற்றுமுறை நாளில் வேதபாராயணம் வாசிப்பதற்கும் மற்றும் நம்பெருமாள் ஆஸ்தான மண்டபம் எழுந்தருளும் சமயம் பிரபந்தங்களை தாள இசையுடன் சேவித்தல், திருஅத்யயன உற்சவத்தில் அறையர் சுவாமிகள் அவரவர் குடும்ப விகிதாசார முறைப்படி நாலாயிர திவ்ய பிரபந்த பாசுரங்களையம் (தமிழ் வேதம்) இசை தாளம் மற்றும் அபிநயத்துடன் சேவித்தல் போன்ற கைங்கர்யங்களைச் செய்யும் மேற்படி மூன்று வகையான பிரிவினருக்கும் பிரம்மரத மரியாதை அந்தந்த கைங்கர்யத்தின் நிறைவு நாளன்று நடைபெறுவது பழக்கத்திலுள்ளது.

பிரம்மரத மரியாதையன்று மேற்படியாருக்கு பெருமாள் மாலை சாற்றி மரியாதை செய்து பல்லக்கில் தூக்கிக் கொண்டு திருக்கோயில் வளாகத்திலிருந்து அவரவர் இல்லங்களில் இறக்கி விடப்படுவது நடைமுறையிலுள்ளது. திருக்கோயில் வழிபாடு செய்யும் இறைவனைத் தான் பல்லக்கில் தூக்கிக் கொண்டு செல்வது முறையாகும். அவ்வாறின்றி மனிதனை மனிதனே தூக்கிக் கொண்டு செல்வது தவிர்க்க வேண்டிய செயலாகும். ஆலயத்தில் மனிதன் இறைவனை தான் வணங்க வேண்டும். ஆலய வளாகத்தில் பிரம்மரத மரியாதை நடைபெறும் நாட்களில் மனிதனை மனிதன் பல்லக்கில் தூக்கிக் கொண்டு வருவதும் அதைப் பார்க்கும் வேறொரு மனிதன் வணங்குவதும் ஏற்கத்தக்கதல்ல. அரசாங்கமே மனிதனை மனிதன் உட்கார வைத்து கையினால் இழுத்துக் கொண்டு செல்லும் கைரிக்‌ஷாவினை ஒழித்து விட்டது. பல்லகிகில் தூக்கி செல்வது ரத்து செய்வது பழக்க வழக்கம் என்ற பெயரால் மனிதனுக்கு மனிதன் ஆலயத்திற்குள் பதவி, இனம், பால், மொழி என்ற காரணமாக வேறுபாடு இருத்தல் கூடாது என்பது தங்களுக்கும் தெரிந்ததே. எனவே தங்களை பல்லக்கில் செல்வதை ரத்து செய்வது குறித்து தங்கள் கருத்தினை 15 நாட்களுக்குள் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்)/- சி. ஜெயராமன்,
இணை ஆணையர் - செயல் அலுவலர்.

உத்தரவுப்படி —— அனுப்பப்படுகிறது.

மேலாளர்.

பெறுநர்

1. வேதவியாச பட்டர் குடும்பத்தினர்கள்.
2. பராசர பட்டர் குடும்பத்தினர்கள்
3. அறையர் குடும்பத்தினர்கள்.

# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

அனுப்புநர்

திரு. சி. ஜெயராமன்,
இணை ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி — 620 006.

பெறுநர்

திரு. வி. ராகவாச்சாரி,
ஆர்.எஸ்.வி. நிலையம்,
பிளாட் எண் : 1958 - பி 11 அவென்யூ,
அண்ணா நகல் மேற்கு,
(அஞ்சல் அலுவலகம் எதிர்புறம்),
சென்னை - 600 040.

ந.க. 555 / 1420 / டி 1 நாள் : 10.10.2010

அய்யா,

பொருள் : பிரம்மரத மரியாதை - அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் - தொடர்பாக.

பார்வை : திரு. வி. ராகவாச்சாரி வழக்கறிஞர் மற்றும் இரண்டு வழக்கறிஞர்கள் கடிதம் நாள் : 02.10.2010.

-------------

பார்வையில் காணும் தங்களது ஸ்ரீரங்கம் 131, வடக்கு உத்திர வீதி முகவரியில் உள்ள திரு. வேதவியாச லட்சுமி நரசிம்ம பட்டர் அவர்களுக்காக கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கு கீழ்க்கண்டவாறு விபரம் தெரிவிக்கப்படுகிறது.

திரு. வேதவியாசலட்சுமி நரசிம்ம பட்டர் என்பவர்தான் கடந்த ஆண்டுக்கு முன்பாக பிரம்மரதம் தொடர்பாக வழக்கிட்டிருந்தார், மனுக்கள் கொடுத்திருந்தார். கோயில் வேதவியாச நரசிம்ம பட்டர் என்பவரும் வேதவியாச லட்சுமி நரசிம்ம பட்டர் என்பவரும் ஒருவரே என்பதை தெளிவுபடுத்த வேண்டுகிறேன். கோ.க.வா. அண்ணன் சுவாமிகள், ரெங்காச்சார் சுவாமிகள், உத்தமநம்பி சுவாமிகள் மற்றும் திருக்கோயில் பட்டர்கள் ஆகியோர் பிரம்மரத மரியாதையின் பல்லக்கில் ஏறிச்செல்லாமல் நடந்துதான் செல்கின்றனர். இத்திருக்கோயிலுக்குள் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகியோர் உள்ள நம்மாழ்வார் சன்னதி, கருடன் சன்னதி, திருக்கச்சிநம்பிகள் சன்னதி, கார்த்திகை கோபுர வாசல் அருள்மிகு ஆஞ்சநேயர் சன்னதி, அருள்மிகு வேணுகோபாலன் சன்னதி, அருள்மிகு சக்கரத்தாழ்வார் சன்னதி, எம்பெருமானார் சன்னதி, உள் ஆண்டாள் சன்னதி, திருப்பாணாழ்வார் சன்னதி, ஆஞ்சநேயர் சன்னதி, தொண்டரடிப்பொடியாழ்வார் சன்னதி, கூரத்தாழ்வார் சன்னதி ஆகிய சன்னதிகள் வழியாக பிரம்மரதம் பல்லக்கில் உட்கார்ந்து செல்வது ஆழ்வார் ஆச்சாரியன் அபசாரத்திற்கு உட்படுவதாகும். மேலும் நான்கு உத்திர வீதிகள் உள்ள ஸ்ரீ மணவாள மாமுனிகள் சன்னதி, கந்தாடை இராமானுசர் சன்னதி , பௌண்டரீகபுர ஆசிரமம் மற்றும் உள்ள இதர சன்னதிகள் முன்பாக பல்லக்கில் அமர்ந்து செல்வது பகவத் பாகவத அபசாரத்திற்கு உட்பட்டதாகும்.

பாரம்பரியமிக்க தென்கலை சம்பிரதாயத் தலைமையிடமான இத்திருக்கோயிலில், வடகலை ஆச்சார்யர்களான அகோபில மடம் ஜீயரும் மங்களா

சாசனத்தின்போது நான்முகன் கோபுர வாசலில் இருந்து நடந்துதான் திருக்கோயிலுக்கு வருகிறார். கோபுர வாயில்கள், கோபுரங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட தெய்வங்கள் உள்ள புனிதமான நுழைவு வாயில்கள். இங்கு பல்லக்கில் மனிதர்கள் உட்கார்ந்து செல்வது ஏற்கக்கூடிய செயலாக இல்லை. மேலும் ஆழ்வார் ஆச்சாரியனின் சந்நதிகள் முன்பாகவும், தெய்வ சன்னதிகளின் முன்பாகவும் பல்லக்கில் அமர்ந்து செல்வது தவறான பழக்க வழக்கமாகும்.

மேலும் பிரம்மரத மரியாதைக்கு பயன்படுத்தப்படும் பல்லக்கு திருக்கோயிலால் வழங்கப்படுவதில்லை. அவரவர்கள் தங்கள் சொந்த பல்லக்கையே பயன்படுத்துகின்றனர். இத்திருக்கோயில் நிர்வாகத்தை செம்மைபடுத்திய ஸ்ரீராமானுசர் காலத்தில் இப்பழக்கம் இருந்திருந்தால் இதற்கான பல்லக்கும் இத்திருக்கோயிலிலேயே இருந்திருக்கும். ஆனால் இதற்கான பல்லக்கு ஏதும் இத்திருக்கோயிலில் இல்லை. எனவே திருக்கோயில் வளாகத்திலிருந்து பல்லக்கில் செல்வது பிற்காலத்தில் ஏற்பட்ட மரபு மீறிய பழக்கமாகும். ஸ்ரீவைணவ ஸ்ரீ பாஞ்சசன்யம் சூன் 2004 - 61இதழில் பல சம்பிரதாயங்கள் மரபு மிறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே திருக்கோயிலுக்குள் இருந்து பல்லக்கில் அமர்ந்து செல்வது பிற்காலத்தில் ஏற்பட்ட மரபு மீறப்பட்ட தவறான பழக்கமாக கருதப்படுகிறது.

காஞ்சீபுரம் அருள்மிகு பெருமாள் திருக்கோயிலில் பிரம்மரத மரியாதையில் திருக்கோயிலுக்குள்ளிருந்து பல்லக்கு செல்வதில்லை. பிரம்மரத மரியாதை உள்ள தாத்தாச்சாரியார்கள் வீதிகளில்தான் பல்லக்கில் செல்கின்றனர். அங்கும் ஆஞ்சநேயர் சன்னதி முன்பு இறங்கி நடந்துதான் செல்கின்றனர். இவ்வாறே ஆழ்வார் திருநகரியிலும் திருக்கோயிலுக்குள் பல்லக்கில் செல்வதில்லை.

ஸ்ரீலோகசாரங்கா என்ற பிராமணர் அட்டவணைபடுத்தப்பட்ட பிரிவினரால் தங்களது அறிவிப்பில் தெரிவிக்கப்பட்ட திருப்பாணாழ்வாரை பல்லக்கில் சுமந்து சென்றார் என தெரிவித்துள்ளீர்கள். இதில் திருப்பாணாழ்வாருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பரிகாரமாக ஸ்ரீலோகசாரங்கா திருந்தி உணரும் வகையில் ஸ்ரீ திருப்பாணாழ்வாரை பல்லக்கில் ஸ்ரீலோசாரங்கா சுமந்து செல்ல ஸ்ரீ ரெங்கநாதரால் அருளப்பட்டது. எனவே ஆண்டவன் முன்பு சாதி வித்தியாசம் கிடையாது என்பதும், உயர்ந்தவர், தாழ்ந்தவர் இல்லை என்பதும், பக்திதான பிரதானம் என்பதும் அனைவருக்கும் புரிய வேண்டும் என்பதற்காகவே ஸ்ரீ ரங்கநாதரால் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. எனவே சாதி வித்தியாசம் ஏதுமில்லை என்பது தங்களுக்கு தெளிவுபடுத்தப்படுகிறது.

பல்லக்கு சுமப்பவர்கள் உயர்ந்தவர்கள் எனவும் இவர்களை ரிக்ஷா ஓட்டுபவர்களுடன் ஒப்பிடக்கூடாது என்று பொருள்படும் வகையில் தங்களது அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது வியப்பாக உள்ளது. செய்யும் தொழிலை வைத்து அதில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என பாகுபடுத்துவது ஏற்கத்தக்கதல்ல. ரிக்ஷா ஓட்டுபவர் அவரது தொழிலாலும்,

பிறப்பாலும், அறிவாற்றலாலும் தாழ்ந்தவர் அல்ல. கைரிக்ஷாகாரர்கள் உவமை என்பது இழிவு படுத்துவதற்காக அல்ல. எனவே பிரம்மரத மரியாதை முழுதும் நிறுத்தப்படுவதாக என்றும் தெரிவிக்கப்படவில்லை. பல்லக்கில் அல்லது கேடயத்தில் மனிதனை ஆலய வளாகத்திற்குள் சுமக்கப்படுவது மட்டுமே திருக்கோயிலால் நிறுத்தப்படவேண்டியதாகும். திருக்கோயிலுக்குள் திருக்கோயில் வளாகத்தில் ஆழ்வார் ஆச்சாரியன் சந்நதிகளின் முன்பும், தெய்வ சன்னதிதானங்களின் முன்பும் மனிதர்களை பல்லக்கில் உட்கார வைத்து மனிதர்களை மனிதர்களே தூக்கிச் செல்வது அனுமதிப்பதை மறுப்பது குறித்து தங்களது கட்சிகாரரிடமும் கருத்து கேட்கப்பட்டது. இதில் அவமானப்படுத்துவதோ, தரக்குறைவாக நடத்துவதோ என்பதான பிரச்சனைகள் இல்லை. ஸ்ரீ ஆண்டாளும், ஆழ்வார்களும், ஆச்சார்யார்களும, சக்கரத்தாழ்வாரும் சன்னதி கொண்டுள்ள இடத்திற்கு மத்தியில் கேடயத்திலோ, பல்லக்கிலோ ஏறிக்கொண்டு செல்வதுதான் ஆன்மீக மக்களை அவமானப்படுத்தும் செயலாகும். நல்ல நம்பிக்கையுடனும் நியாயமான உணர்வுடனும் (Good faith and Bonafide) சமத்துவம் நாடும் வைணவ கோட்பாடுடனும் கருத்து கேட்கப்பட்டது.

எனவே இதில் மானநஷ்டம் எதுவும் ஏற்படவில்லை எனவும், ஆழ்வார்கள் ஆச்சார்யர்கள் சன்னதி முன்பு நடந்து செல்வதுதான் சரியானது எனவும், ரிக்ஷா இழுப்பவர்களை இழிவானவர்களாக கருத வேண்டாம் எனவும், தங்களது கட்சிக்காரருக்கு தெளிவாக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இதனையே தங்களது 02.10.2010ந் தேதியிட்ட அறிவிப்பிற்கு பதிலாக ஏற்றுக் கொள்ள வேணுமாய் கேட்டுக் கொள்கிறேன். கால அவகாசம் கருதி உடன் இப்பதிலை அனுப்பி வைக்கப்படுகிறது. வழக்கறிஞரை ஆலோசித்து விரிவான அறிவிப்பினை தொடர்ந்து அனுப்பி வைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒம்)/- சி. ஜெயராமன்,
இணை ஆணையர் - செயல் அலுவலர்.

உத்தரவுப்படி —— அனுப்பப்படுகிறது.

மேலாளர்.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது:

ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை - 600 034.

37. In such circumstances, this Court is of the considered view that the petitioner has not shown sufficient cause or reason to grant the reliefs, as prayed for by the petitioners, in the present Writ Petitions. Hence, the Writ Petition, in W.P(MD).No.13055 of 2010, stands dismissed. No costs. Consequently, the connected miscellaneous petitions, in M.P.(MD).Nos.1 to 4 of 2010, are also dismissed.

38. With regard to the impleading petitions, in M.P.(MD).Nos.2 to 4 of 2010, in W.P(MD).No.13055 of 2010, this Court is of the considered view that by allowing the impleading petitions the scope and ambit of the subject matter in the Writ Petition would be unnecessarily enlarged. It had also been found that there is no necessity to implead the petitioners, as parties to the Writ Petition, for the purpose of deciding the issues, which had arisen for consideration of this Court, in the present Writ Petition. Therefore, while dismissing the Writ Petition, the connected miscellaneous petitions are also dismissed. No costs. However, it goes without saying that it would be open to the petitioner, in the Writ Petition, in W.P.(MD).No.13055 of 2010, to

0477598

establish his claims before the appropriate authority or forum, in the manner known to law.

39. Further, it is found that the reliefs sought for by the petitioner in the Writ Petition, in W.P.(MD).No.14229 of 2009, has already become infructuous. Hence, the same is dismissed as infructuous. Consequently, the connected miscellaneous petition is closed. No costs.

Sd/-
Assistant Registrar(Crl.Side)

/True Copy/

19-11-10
Sub Assistant Registrar

To

1. The Commissioner,
   Hindu Religious and Charitable Endowment,
   Nungambakkam High Road,
   Chennai.

2. The Joint Commissioner cum Executive Officer,
   Srirangam Arulmighu Aranganatha Swamy Thirukoil,
   Srirrangam, Trichy.

+1 LR COPY

+2 CCS TO MR. K. GOVINDARAJAN, ADVOCATE S.R NO. 46811 & 46812
+1 CC T MR.V.R. SHANMUGHANATHAN, ADVOCATE S.R NO. 46993
+1 CC TO MR. S. VANCHINATHAN, ADVOCATE S.R NO. 46917
+1 CC TO MR. M. THIRUNAVUKKARASU, ADVOCATE S.R NO. 46746
+2 CCS TO THE SPECIAL GOVERNMENT PLEADER S.R NO. 46777 & 46776

W.P.(MD)Nos.14229 of 2009 &
W.P(MD).No.13055 of 2010
19.11.2010

ssm
PAM 19.11.2010/11C/17P

0477599